ஆர்கிட்ஸ்

1. செதில்பூச்சி, டையஸ்பிஸ் பையோஸ்டுவாலி:

சேதத்தின் அறிகுறி:

- குஞ்சுகளும், பூச்சிகளும் இலைகளின் சாற்றை உறிஞ்சும்
- இலைகளையும் கிழங்குகளையும் சேதப்படுத்தும்
- தேன்துளிகள் கரும்புகை பூஞ்சாணம் உருவாகக் காரணமாகின்றன
- இலைகள் மஞ்சளாகிவிடும்
- இலைகள் காய்ந்து உதிர்ந்துவிடும்
- கேட்டிலியா மற்றும் சிம்போடியத்தில் காணப்படும்

கட்டுப்படுத்தும் முறை:

- டெரிஸ் தாவரத்தின் வேர் சாற்றினை பயன்படுத்தலாம்
- மீன் எண்ணெய் ரோசின் சோப்பு 15 கிராம் / லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவும்
- கிரைசோபா இரைவிழுங்கியை களத்தில் விடலாம்
- கிரிப்டோலேமஸ், ஸ்கிம்ணஸ் இரைவிழுங்கிகளை பாதுகாக்கலாம்
- மாலத்தியான் (அ) மிதைல் பாரத்தியான் (அ) பாசலோன் (அ) மிதைல் டெமட்டான் 1மி.லி / லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கலாம்

2. மாவுப்பூச்சி

சேதத்தின் அறிகுறி:

- மாவுப்பூச்சிகள் இலைகளையும், தண்டுகளையும், மூடியிருக்கும் தாவரத்தின் சாறினை உறிஞ்சும். தேன்துளிகளை சுரக்கும் அது எறும்பை கவரும்
- தாக்குதல் அதிகமாகினால் கருப்புப்புகை பூஞ்சாணம் இலைகளில் காணப்படும்
- தாக்கப்பட்ட தாவரங்கள் கம்பீரத்தை இழந்து காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- கிரிப்டோலேமஸ், ஸ்கிம்ணஸ் பொறிவண்டுகள் மாவுப்பூச்சியை உண்ணும்
- மாலத்தியான் 1மி.லி / லிட்டர் (அ) பாஸ்பாமிட்டான் 0.5 மி.லி / லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவும்.

3. **சிலந்திகள், டெட்ராளைக்கஸ் யுர்டிகே:**

**சேதத்தின் அறிகுறி:**

- இலைகளில் உள்ள சாறை உறிஞ்சி, வெள்ளை புள்ளிகளை உண்டுபண்ணும்
- தாவரங்களை கொத்துகளாக்கும்
- காய்ந்த மற்றும் மித வெப்ப பருவங்களில் கடுமையான தாக்குதலை உண்டுபண்ணும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- அம்சியாஸ் வகை, பைட்டோசியால்லஸ் பெர்சிமிலிஸ் இந்த இரைவிழுங்கி சிலந்திகள் மற்ற சிலந்திகளை உண்ணும்

4. **நத்தைகள் (பெரிய ஆப்ரிக்கன் நத்தைகள்) அகட்டினா பியுலிகா:**

**சேதத்தின் அறிகுறி:**

- இளம் இலைகள், வேர்கள், மொட்டுகள், விரிந்த மலர்கள் ஆகியவற்றை உண்ணும்
- நத்தைகள் பகலில் மறைந்துகொள்ளும் இரவில் சுறுசுறுப்பாக செயல்படும்
- இலைகளின் மேற்பகுதியில் அதன் திரவங்கள் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- மெட்டால்டிகைடு 15 சதவிதம் தெளித்தால் கட்டுப்படுத்தலாம்
- எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டால், சேகரித்து அழித்துவிடவும்.